1984 மார்ச் 23]

திரு. ஜே. எம். மியாகான் : இந்த கான்ட்ரிபூஷன் வந்தால்தான், அவர்களுக்குச் சம்பளம் கிடைக்குமா என்று கேட்க விரும்புகிறேன். அதைப் பொறுத்துத்தான் சம்பளம் வழங்கப்படுகிறதா ? இதுதான் அவர்களுடைய பாலிசியா என்று அறிய விரும்புகிறேன். மற்ற வாரியங்களைப் போல ஒன்றாம் தேதி பிறந்தவுடன் சம்பளம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பாலிசி என்பதல்ல பிரச்சினை. அப்படிப்பட்ட பாலிசியை தனியாக அமைக்க முடியாது. வக்ஃப் வாரியத்தின் வேலையைக் கவனிப்பது, உரிய முறையில் வருகின்ற வருவாயில் குறிப்பிட்ட தொகையைப் பெறுவது, அதைப் பிரித்துக் கொடுப்பது, அதனுடைய பங்கிலிருந்து ஊழியர்களுக்குத் தேவையான சம்பளத்தைக் கொடுத்து கணக்குகளை வைப்பதில் ஈடுபடுவது ஆகியவைதான் அவர்களுடைய வேலை. அந்த முறையில் வருகின்ற வருவாயை வைத்துத்தான் சம்பளம் கொடுக்க முடியும். உள்ளாட்சித் துறையிலுள்ள ஊராட்சி பேரூராட்சிகளிலும் அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே அந்த அந்த நிலையில்தான் வக்ஃபு வாரியமும் செயல்படுகின்றது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

Regional Wakf Boards.

* 109. *Q.*—Thiru J. M. MIAKHAN and Dr. T. R. JANARTHANAM : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to constitute Regional Wakf Boards; and

(*b*) if so, when they will start functioning ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) & (இ) 1954-ம் ஆண்டு மத்திய வக்ஃபு சட்டத்தில் மண்டல வக்ஃபு வாரியங்கள் (Regional Wakf Board) அமைப்பது எதும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் மண்டல குழுக்கள் (Regional Committees) அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, மேற்படி கருத்துரு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எம். மியாகான் : அப்போதுள்ள அமைச்சர் அவர்கள் இதே சபையில் அந்த மாதிரி ரீஜனல் வக்ஃபு போர்டு அமைப்போம் என்று வாக்குறுதியைத் தந்துள்ளார்கள். இதைக் கைவிட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மூலக் கேள்விக்கான விடையில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தற்போது முப்பத்தைந்தாயிரம் வழக்குகள் இன்னும் தீர்க்கபபடாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு இருக்கும்போது, நாகர்கோவில் பகுதியிலிருந்து இந்த முறையீட்டிற்கு இங்கே வருகிற நிலை இருக்கிறது. அதை உத்தேசித்து விரைவாக ஐந்து மண்டல வக்ஃபு வாரியங்களாக அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இப்படித் தனித் தனியாக 5 மணடலங்களில் குழுக்கள் அமைத்தாலும் கூட, அந்தக் குழுக்கள் முதற் கட்ட விசாரணை என்று சொல்லக் கூடிய (Preliminary enquiries) -ஐ தான் செய்ய முடியுமே தவிர, அதற்கு அதிகார பூர்வமாக உரிய தீர்ப்புகளை வழங்கக்கூடிய அதிகாரம் கிடையாது ; சட்டத்திலும் கிடையாது. ஆகவே, அந்தச் சூழ்நிலையில், இதனால் மிகப் பெரிய பயன் கிடைக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. இருந்தாலும், ஆங்காங்கே மண்டலக் குழுக்கள் அமைக்கப் பட்டு அவ்வாறு (Preliminary enquiries) நடத்தப்பட்டுத்தான் வருகின்றன என்பதனை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU J. M. MIAKHAN : The main purpose of the request for Regional Committees was that thousands of cases were pending before the Wakf Board and they had not been looked into. On the floor of this House the Hon. Minister had agreed to constitute Special Boards or Tribunals, whatever may be, to expedite the disposal of the cases. What will happen to the thousands of cases pending before the High Court and other Courts and before the Wakf Board? What is to be the fate of those cases?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல அப்படி மண்டலக் குழுக்கள் அமைத்து, அதன் வாயிலாக இப்படிப்பட்ட விசாரணை மேற்கொண்டாலும் கூட, அந்தக் குழுக்களுக்கு இறுதித் தீர்ப்பு வழங்கக் கூடிய அதிகாரம் கிடையாது. ஆகவே அப்படியே அந்தக் குழுக்கள் (Preliminary enquiry) *prima facie* என்று சொல்லக் கூடிய கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை எடுத்துச் சொன்னாலும் கூட, அந்த உண்மைகளின் அடிப்படையில் மறுபடியும் வக்ஃபு

வாரியத்தில் அமைக்கப்பட்ட முறைப்படியான வழக்கு மன்றத்தில் தான் தீர்ப்புகள் வழங்கப்படும். ஆகவே இன்னும் சொல்லப் போனால், இரட்டிப்பு வேலையாக இருக்கின்றது. என்றாலும் இயன்ற அளவு ஆரம்பத்திலேயே ஒரு அடிப்படை ஆதாரம் கூட இல்லை என்றாலும் வழக்கை முடித்து விடலாம். அந்த அளவிற்குத்தான் அது பயனுள்ளதாக இருக்கும். அந்த வகையில் இப்போது ஒரு சில மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ரீஜனல் போர்டு என்பது வேறு ரீஜனல் கமிட்டி என்பது வேறு. ரீஜனல் போர்டு கைவிடப் பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். ஆனால் திரு. மியாகான் சொன்னது போல, 35,000 வழக்குகள் இருந்தாலும், இப் போதே அந்த போர்டுகள் ஆங்காங்கே விசாரணை செய்கின்றன. எனவே போர்டிலே அதிகமான வழக்குகள் இருந்தால், இப்போது பின்பற்றப்படும் முறையைப் பின்பற்றி, அந்தந்த ஸ்லத்திற்கே சென்று வழக்குகளைப் பைசல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியவாறு, இப்போது கடைபிடிக்கப்படுகின்ற வழி முறைகள் நிச்சயமாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். இப்போது போர்டே ஆங்காங்கே உள்ள பகுதிகளுக்குச் சென்று தேவைப்படுகின்ற இடத்தில் தேவைப்படுகின்ற விசாரணையை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் 24—3—1984-க்குப் பதிலாக 27—3—1984 அன்று எடுத்துக் கொள்ளப்படும். 24—3—1984 அன்று மேலவைக் கூட்டம் இல்லை. மருத்துவமும், மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கான நாள் பின்னர் அறிவிக்கப்படும்.